**உடுமலைப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்**

பிறப்பிப்பவர்:திரு.**கே.**கே.ஜீவானந்தம்.,

ந.க.எண்: 2391/2019/ஆ1 நாள்:15.07.2020.

பொருள் : மனைப்பிரிவு - அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தல் திட்டம் 2017 - உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் பூலாங்கிணர் ஊராட்சி க.ச.எண்: 211/3A pt-ல் 1.00 (4046.856 ச.மீ) பரப்பளவு உள்ள கென்னடி நகர் எக்ஸ்டன்சன் -1 என்ற பெயர் கொண்ட அனுமதியற்ற மனைகள் மற்றும் குடியிருப்பு மனைப்பிரிவு வரன் முறைத்திட்ட விதிகள் 2017-ன் கீழ் கொள்கையளவிலான வரைபடத்துக்கு ம.வ.(வரன்முறை/கோ.ம.எண்:83/2019) என்ற எண்ணில் வரன் முறை தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது அனுமதியற்ற மனைகள் மற்றும் குடிநிருப்பு மனைப்பிரிவு வரன் முறைத்திட்ட விதிகள் 2017-ன் கீழ் வரன் முறைப்படுத்தி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை : 1.மனுதாரர் திரு.G.முத்துலிங்க நித்யானந்தம் அவர்கள் இணையதள விண்ணப்பம் எண்:DTCP/L/0051331/2017 நாள்:08.02.2018 மற்றும் DTCP/L/0680191/2017 நாள்:14.11.2018.
2.அரசாணை எண்:78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017.
3.அரசாணை எண்:172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017
4.அரசாணை எண்:55 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:02.05.2018.
5.நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களது கடிதம் எண:13193/2017/எல்ஏ2, நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
6.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் ந.க.எண்:3947/2018/கோம-3 நாள்:05.02.2019.
7.மண்டல துணை வட்டார வளர்சசி அலுவலர் அறிக்கை நாள்:04.03.2020.

.......

**உத்தரவு:**

உடுமலைப்பேட்டை வட்டாரம் பூலாங்கிணர் ஊராட்சி க.ச.எண்: 211/3A pt-ல் 1.00 (4046.856 ச.மீ) பரப்பளவு உள்ள கென்னடி நகர் எக்ஸ்டன்சன் -1 என்ற பெயர் கொண்ட அனுமதியற்ற மனைகள் மற்றும் குடிநிருப்பு மனைப்பிரிவு ம.வ.(வரன்முறை/கோ.ம.எண்:83/2019) என்ற எண்ணில் வரன்முறை தொழில்நுட்ப ஒப்புதல் பார்வை 1-ல் கண்ட விண்ணப்பத்தினை தொடர்ந்து பார்வை-2 முதல் 5 வரையிலான அரசு ஆணைகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை-6ல் காணும் நகர்ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் கடிதத்தில் வரன்முறைப்படுத்தி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1.மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : | 1.00 ஏக்கர் (அ)43560.00 ச.அடி (அ) 4046.856 ச.மீ |
| 2.மனைப்பிரிவின் மொத்த எண்ணிக்கை | : | 18மனைகள் |
| 3.விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 1 மனை |
| 4.விற்கப்பட்ட மனை எண்கள் | : | 01 |
| 5.விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 15 மனைகள் |
| 6.விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,17,18 |
| 7.விற்கப்படாத மனைகளின் மொத்தப்பரப்பளவு | : | 33012.00 ச.அடி. |
| 8.தற்போது உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு மனைகள் விபரம். | : | 3379.50. ச.அடி (10.24%) (மனை எண்கள்:15,16) |

பார்வை-4ல் கண்ட அரசானையில் தெரிவித்துள்ளபடி இம் மனைப்பிரிவில் விற்கப்படாத மனைகளுக்கு பரிசீலினை கட்டணம், அபிவிருத்தி கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவை உரிய அரசு தலைப்புகளில் செலுத்தியது உறுதி செய்யப்படுகிறது. பூலாங்கிணர் ஊராட்சி விற்கப்படாத க.ச.எண்: 211/3A pt-ல் 1.00 (4046.856 ச.மி)-ல் கென்னடி நகர் எக்ஸ்டன்சன் -1 என்ற பெயரில் அமைந்துள்ள 15 (பதினைந்து மட்டும்) மனைகள் மட்டும் வரன் முறைப்படுத்தி உத்திரவிடப்படுகிறது.

பார்வை-4ல் கண்ட அரசானையில் தெரிவித்துள்ளபடி இம்மனைப்பிரிவில் விற்கப்பட்ட மனைகளுக்கு விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுவதுடன் பரிசீலினைச் [illegible]ணம் செலுத்தியதை உறுதி செய்து கொண்டும் அபிவிருத்திக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டண... செலுத்தியதை உறுதி செய்து கொண்டும் தனிமனை வரன்முறைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். பூலாங்கிணர் ஊராட்சிக்கு ஆவண எண்கள்:3541/2020 நாள்:06.06.2020- மற்றும் 5080/2015 நாள்:13.07.2015-ன்படி பொதுப்பாதைகள் மற்றும் பொதுப்பயன்பாட்டு இடங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்டவாறு அரசு தலைப்புகளில் தொகை செலுத்தப்பட்டது.

**1.வரன்முறை கட்டணம்:82588**
2.வளர்ச்சிக்கட்டணம்: **68300**

---

**மொத்தம் : 150888**

---

இம்மனைப்பிரிவு வரைபடத்தில் விற்கப்படாத மனைகளில் OSR ஒதுக்கீடு செய்துள்ள மனைகள்/மனைப்பகுதிக்கு பரிசிலினைக் கட்டணம் செலுத்தியிருந்தாலும் அந்த மனை அல்லது மனைப்பகுதியினை வரன்முறை செய்து ஊராட்சியால் அனுமதிகள் வழங்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
உடுமலைப்பேட்டை

பெறுநர்:
திரு.G.முத்துலிங்க நித்யானந்தம்,
283/JVN Nagar
அந்தியூர், உடுமலைப்பேட்டை
திருப்பூர் மாவட்டம் 642122.

நகல்:
1.தலைவர்,
பூலாங்கிணர் ஊராட்சி

நகல்:
3.நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் (கோயமுத்தூர்)அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
4.உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருப்பூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.